ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1908/34 - 2015 අප්‍රේල් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.02

*1908/34 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தினதும், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழும் செய்யப்படுகின்ற அறிவித்தல்.

2. சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர், நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சூழல், செய்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய நான், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1அ) ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கேற்ப எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய நகர சபையின் தவிசாளர் வணக்கத்துக்குரிய வேவெல்தூவே ஞானபிரப தேரர் அவர்கள், எம்பிலிப்பிட்டிய நகர சபையின் தவிசாளராக பணியாற்றும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (01) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக குற்றமொன்று செய்துள்ளாரென்பது சம்பந்தமாக பரிசீலனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதி அலுவலர் ஒருவரான ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சமன் விக்கிரம விக்கிரமாரச்சி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

3. மேலும், சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர், நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சூழல், செய்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய நான், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1ஆ) (அ) (i) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைப்படுத்தலுக்கு அமைவாக இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய நகர சபையின் தவிசாளர் வணக்கத்துக்குரிய வேவெல்தூவே ஞானபிரப தேரர் அவர்கள், குறித்த நகர சபையின் தவிசாளர் பதவியில் பணியாற்றுதல் உடன் அமுலுக்குவரும் வகையில் இடைநிறுத்தப்படுகின்றது.

4. மேலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தினதும் (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழும் எம்பிலிப்பிட்டிய நகர சபையின் தவிசாளர் பதவியில் பணியாற்றிய வணக்கத்திற்குரிய வேவெல்தூவே ஞானபிரப தேரர் அவர்கள், அப்பதவியில் பணியாற்றுதல் உடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதனால், இடைநிறுத்தப்பட்டுள்ள கால எல்லையினுள் அவரது அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு, பணிகளை நிறைவேற்றுவதற்கும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தினதும் ( 255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் சட்டளைச் சட்டத்தின் 184 (1ஆ) (அ) (i) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப எம்பிலிப்பிட்டிய நகர சபையின் துணைத் தவிசாளர் பதவியில் பணியாற்றும் திரு. டபிள்யூ. ஜி. லலித் தர்ம கீர்த்தி அவர்களுக்கு கட்டளையிடப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
முதலமைச்சர், நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய,
மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு,
போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சூழல், செய்தி
மற்றும் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள்
விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண முதலமைச்சு,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2015, ஏப்பிறல் 02.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.